**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**முன்னிலை :– திருமதி. P. கனிமொழி, L. L. M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 24 ஆம் நாள்.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் நாள் செவ்வாய் கிழமை

TNMY09-000523-2026

**சுருக்கு வழக்கு எண். 220/2026**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>பொறையார் காவல் நிலையம்,<br>குற்ற எண் 140/2024 |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரிகள் | : | 1. குருவேலன், 53/2026<br>த/பெ குஞ்சு<br>ராஜாம்பாள் தெரு, பொறையார்,<br>தரங்கம்பாடி தாலுக்கா.<br><br>2. வேல்முருகன், 55/2026<br>த/பெ ஜோதி<br>ராஜாம்பாள் தெரு, பொறையார்,<br>தரங்கம்பாடி தாலுக்கா. |

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்றம் சாட்டப்பட்டது | | 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 341, 427, 506(i)ன் கீழ்<br>2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 341, 427 ன் கீழ் |
| 2. | குற்றம் குறித்து வினவப்பட்டது | | 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 341, 427, 506(i)ன் கீழ்<br>2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 341, 427 ன் கீழ் |
| 3. | சம்பவம் நடந்த நாள் | | 21.05.2024 |
| 4. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | | 22.05.2024 |



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.07 14:17:58 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப்பட்ட நாள் | | பிணையில் சென்ற நாள் |
| | | 14.12.2025 | | 14.12.2025 |
| 6. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 14.12.2025 | | |
| 7. | பிரிவு 274 of BNSS ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 18.03.2026 | | |
| 8. | பிரிவு 355 of BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | 1) புகார்தாரர் தரப்பில் U/s 359 (ii) of BNSSன் கீழ் 25.03.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.01/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.<br>2) அரசு தரப்பில் U/s 348 of BNSS ன் கீழ் 26.03.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.02/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. | | |
| 9. | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 25.03.2026 | 25.03.2026 |
| | | அ.சா.2 | 25.03.2026 | 25.03.2026 |
| | | அ.சா.3 | 26.03.2026 | 26.03.2026 |
| 10. | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து பிரிவு 351(1)(b) of BNSS ன் கீழ் வினவிய நாள் | 06.04.2026 | | |

இவ்வழக்கு 09.03.2026 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 06.04.2026–ஆம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2, திருமதி. B. செந்தில்வடிவு, தரங்கம்பாடி அவர்கள்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.07 14:18:13 +0530

முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. R ரம்யா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

1. கடந்த 21.05.2024ம் தேதி 13.00 மணிக்கு பொறையார் காவல் சரகம், பொறையார் ராஜாம்பாள் தெரு சர்வே எண். 89ல் வாதியானவர் ரெடிமேடு காம்பவுண்ட் சுவர் வைத்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரிகள் இருவரும் வாதியை பார்த்து இந்த இடத்துல காம்பவுண்ட் சுவர் வைக்காதீங்க என்று சொன்னபோது வாதியானவர் என் இடத்துல வைக்குறேன் அதை ஏன் தடுக்குறீங்க என்று நியாயம் கேட்கவும் தங்களுக்கு பாதையை விடாம காம்பவுண்ட் வைப்பியா குச்சிக்காரி மவனே தேவிடியா மவனே என்று எதிரிகள் இருவரும் வாதியை தரக்குறைவாக திட்டிக்கொண்டே வாதியின் காம்பவுண்ட் சுவரையும் போஸ்ட்டையும் உடைத்து சேதப்படுத்தியும், வாதியின் காம்பவுண்ட் சுவர் வைத்துக்கொண்டிருந்த வேலை ஆட்களையும் நீங்க இங்க வேலை செய்யக்கூடாது என்று வேலை ஆட்களை வேலை செய்யவிடாமல் எதிரிகள் இருவரும் தடுத்தபோது 1 வது எதிரியானவர் வாதியை பார்த்து இனிமே உன்னை இங்க பார்த்தேன் காலி பண்ணிவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம்புரிந்துள்ளதால் 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 341, 427, 506(i)ன் கீழ் 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 341, 427 ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 341, 427, 506(i) ன் படி வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிகளுக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும். பிரிவு 230 BNSSன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.07 14:18:23 +0530

4. எதிரிகளின் மீதான குற்றத்தின் சாராம்சத்தை குவிமுச பிரிவு 251 ன் கீழ் விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தினை மறுத்துரைத்தனர். எனவே வழக்கானது அரசு தரப்பு சாட்சியத்திற்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**:-

6. **அ.சா.1 அருணாச்சலம் தனது சாட்சியத்தில்** தனது சாட்சியத்தில், சுமார் 1½ வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தான் வீட்டில் இருந்தபோது தங்கள் தெருவில் சிலர் கூட்டமாக தகராறு செய்துகொண்டிருந்தார்கள் என்றும், அந்த தகராறை வேடிக்கை பார்க்க சென்ற போத அந்த கூட்டத்தில் இருந்த யாரோ தங்கள் வீட்டு சிமெண்ட் காம்பவுண்ட் சிலாப்பை உடைத்துவிட்டார்கள் என்றும், யார் உடைத்தார்கள் என்று தெரியவில்லை என்றும், அந்த கூட்டத்தில் எதிரிகள் இருந்ததாலும் அவர்களுக்கும் தங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாலும் அவர்கள்தான் தங்கள் வீட்டு சிமெண்ட் சிலாப்பை உடைத்திருப்பார்கள் என நினைத்து அவர்கள் மீது மிகை படுத்தி புகார் மனு கொடுத்துவிட்டதாகவும், நீதிமன்றத்தில் தற்போது தன்னிடம் காட்டப்படும் **புகார் மனுவில் உள்ள அ.சா.ஆ. 1 ஆன கையொப்பம்** தன்னுடையது தான் என்றும், பிறழ் சாட்சியமாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. **அ.சா.2 ரவிக்குமார்** தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று பிறழ் சாட்சியமாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. **அ.சா.3 சுப்ரமணியன்** தனது சாட்சியத்தில், தற்போது பொறையார் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தன்னோடு பணிபுரிந்த வகையில் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் அவர்களின் கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்றும், இந்த வழக்கின் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டபடியாலும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.07 14:18:32 +0530

ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 21.05.2024 ஆம் தேதி 20.30 மணியளவில் பொறையார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது அருணாச்சலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.சா.ஆ.2 ஆன புகார்** மனுவை பெற்று காவல் நிலைய மனு எண்.309/2024 என பதிவு செய்து விசாரணைக்கு பின்னர் கடந்த 22.05.2024 அன்று மதியம் 14.00 மணிக்கு காவல் நிலைய குற்ற எண்.140/2024, இதச பிரிவுகள் 294(b), 341, 427, 506(i) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கின் **அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையை** பதிவு செய்ததாகவும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்த்திகேயன் மற்றும் சரணவன் ஆகியோர்கள் முன்னிலையில் **அ.சா.ஆ.4 ஆன பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 ஆன மாதிரி வரைபடம்** தயார் செய்தார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், பின்னர் வழக்கின் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து 14.12.2025 அன்று இதச பிரிவுகள் 294(b), 341, 427, 506(i) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

9. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுவிட்டதால் அரசு தரப்பு பட்டியல் சாட்சிகள் 2, 4 முதல் 6 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரிக்க தேவையில்லை என்று கருதி மேற்குறிப்பு செய்ததன் பேரில் அந்த சாட்சிகளை விசாரிப்பதில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

10. எதிரிகளிடம் பிரிவு 351(1)(b) BNSSன் கீழ் எதிரிகளுக்குப் பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரிகள் சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினர். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

11. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 341, 427, 506(i)ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.07 14:18:41 +0530

294(b), 341, 427 ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

12. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

**தீர்வு**

13. எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வரை வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்களாக **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5** வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. அ.சா.1 தனது புகார்மனுவில், கடந்த 21.05.2024ம் தேதி 13.00 மணிக்கு அ.சா.1 அவரது இடத்தில் ரெடிமேடு காம்பவுண்ட் சுவர் வைத்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரிகள் இருவரும் அ.சா.1ஐ தரக்குறைவாக திட்டியதாகவும், காம்பவுண்ட் சுவரையும் போஸ்ட்டையும் உடைத்து சேதப்படுத்தியதாகவும், அ.சா.1 ன் காம்பவுண்ட் சுவர் வைத்துக்கொண்டிருந்த வேலை ஆட்களை வேலை செய்யவிடாமல் தடுத்ததாகவும், 1 வது எதிரியானவர் அ.சா.1ஐ பார்த்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறிவிட்டு அதற்கு முரண்படும் வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 1½ வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தான் வீட்டில் இருந்தபோது தங்கள் தெருவில் சிலர் கூட்டமாக தகராறு செய்துகொண்டிருந்தார்கள் என்றும், அந்த தகராறை வேடிக்கை பார்க்க சென்ற போது அந்த கூட்டத்தில் இருந்த யாரோ தங்கள் வீட்டு சிமெண்ட் காம்பவுண்ட் சிலாப்பை உடைத்துவிட்டார்கள் என்றும், யார் உடைத்தார்கள் என்று தெரியவில்லை என்றும், அந்த கூட்டத்தில் எதிரிகள் இருந்ததாலும் அவர்களுக்கும் தங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாலும் அவர்கள்தான் தங்கள் வீட்டு சிமெண்ட் சிலாப்பை உடைத்திருப்பார்கள் என நினைத்து அவர்கள் மீது மிகை படுத்தி புகார் மனு கொடுத்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 அரசு தரப்பு குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகளோடு சமாதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார். இவ்வழக்கினை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.07 14:18:49 +0530

பாவிக்கப்பட்டுள்ளார். எனவே, மேற்படி சாட்சிகளின் சாட்சியம் நம்பக்கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், எதிரிகள் அ.சா.1ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ, அ.சா.1ன் காம்பவுண்ட் சுவரையும் போஸ்ட்டையும் உடைத்து சேதப்படுத்தியதாகவோ, வேலைசெய்த ஆட்களை வேலை செய்யவிடாமல் தடுத்ததாகவோ, 1 வது எதிரி அ.சா.1ஐ கொலை மிரட்டல் விடுத்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

16. எனவே, இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 அரசு தரப்பு வழக்கையும், வழக்கு சம்பவத்தினையும் சார்ந்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் சம்பவம் பற்றி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரிகள் மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. முடிவாக, 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 341, 427, 506(i)ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 341, 427 ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றத்தில் எதிரிகள் **"குற்றவாளிகள் இல்லை"** என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 278(1) BNSS–ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

19. எதிரிகளால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.07 14:19:57 +0530

20. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.07 14:20:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி.

**அட்டவணை** :–

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா.1 – அருணாச்சலம்

அ.சா.2 – ரவிக்குமார்

அ.சா.3 – சுப்ரமணியன், சிறப்பு உதவி ஆய்வாளர்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :–

அ.சா.ஆ.1 – புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம்

அ.சா.ஆ.2 – புகார்

அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 – பார்வை மகசர்

அ.சா.ஆ.5– மாதிரி வரைபடம்

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** :– இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள்** :– இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.07 14:20:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி.

**குறிப்பு:**

1. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் ஜாமீனில் இருந்தனர்.

2. எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.